DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 358/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | ஸ்ரீஜா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.கிட்டப்பா |
| Village | : | திருப்பாலைக்குடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.12.2023

---

**முதல் விசாரணை**

1. நான் திருப்பாலைக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் விஸ்வநாதன் கிளினிக்கில் செவிலியராக வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும்.

2. நான் கிளினிக்கில் வேலைக்கு செல்லும்போதேல்லாம் எதிரி என்னை பின்தொடர்ந்து பைக்கில் வந்து கொண்டிருந்தார். அப்போது இரண்டு மூன்று தடவை பின்தொடர்ந்து வந்தார். நான் வீட்டில் எனது அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டேன்.

3. அதன்பிறகு மறுபடியும் பின்தொடர்ந்து வந்தார். அதன்பிறகு நான் வேலைக்கு செல்லவில்லை. அதன்பிறகு நான் ஆர்.எஸ்.மங்கலம் அரசு மருத்துவமனைக்கு நர்சிங் பயிற்சிக்கு சென்றேன்.

4. அப்போது திருப்பாலைக்குடியில் படிக்கு எனது உறவினரிடம் என்னை விரும்புகிறேன் என்று எதிரி சொல்லியிருந்தார். நான் எனது சித்தியிடம் சொல்லி எதிரியிடம் சொல்ல சொன்னேன். எதிரி அதற்கு கேட்க மாட்டேன் என்று சொன்னார்.

5. அதன்பிறகு எதிரியை எனது சித்தி சொல்லி கண்டித்து வைத்தார். 10.06.2022ம் தேதி இரவு 07.30 மணியளவில் வேலை முடித்துவிட்டு திருப்பாலைக்குடி வந்தபோது எதிரி பைக்கில் வந்து ஹாரன் அடித்து கேலி செய்தார்.

6. அதை நான் வீட்டில் போய் சொன்னேன். எனது தந்தையார் போய் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்கிறாய் என கேட்டுள்ளார். பிறகு எதிரி எனது சித்தப்பா வீட்டிற்கு சென்று தகராறு செய்துள்ளார்.

7. அதன்பிறகு 24.06.2022ம் தேதி மகளிர் காவல் நிலையம சென்று புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் தான் அது **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. நானும் எதிரியும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சி எனது அம்மா மகாலட்சுமி, அப்பா கிட்டப்பா, சித்தி வசந்தா ராணி, சித்தப்பா சமயமுத்து ஆகியேயார்கள் ஆவார்கள். எதிரி வீடும் சமயமுத்து வீடும் பக்கத்து, பக்கத்து வீடு என்றால் சரிதான்.

2. சம்பவம் நடக்கும்போது நான் இராமநாதபுரம் கேணிக்கரையில் வேலை பார்த்து வந்தேன். நான் தினமும் வேலைக்கு பேருந்தில் தான் வந்து செல்வேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் பகல் ஷிப்ட் வேலை பார்த்தேன்.

3. சம்பவத்திற்கு முன்பு எதிரி என்னை கேலி செய்தது சம்பந்மாக புகார் ஏதும் அளித்தீர்களா என்றால் இல்லை. 17.06.2022 ம் தேதி இவ்வழக்கின் சாட்சிகள் எனது அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி ஆகியோர்கள் சென்று எதிரியை அடித்து திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. 10.06.2022 ம் தேதி நான் திருப்பாலைக்குடி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். அந்த புகார் சம்பந்தமாக வழக்கு ஏதும் பதிவு செய்யப்பட்டதா என்றால் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

5. புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். எனது புகார்மனுவில் திருவாடனை காவல் நிலைய ஆய்வாளர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் மொபைல் போன் என்னிடம் இல்லை. எதிரியின் பெயரை புகார்மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. நான் சொன்னதுபோல சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால்

சரியல்ல. சம்பவம் சம்பந்தமாக திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனது அப்பா, அம்மா, சித்தி, சித்தப்பா ஆகியோர்கள் மீது புகார் அளித்ததால் அதை மனதில் வைத்துக் கொண்டு இந்த எதிரி மீது பொய் புகார் அளித்தேன் எனறு சொன்னால் சரியல்ல

7. இது சம்பந்தமாக புகார் அளித்த ஒருவாரம் கழித்து நான் திருப்பாலைக்குடியில் நான் வேலை பார்த்த கிளினிக்கில் வைத்து என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 358/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மகாலட்சுமி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.கிட்டடப்பா |
| Village | : | திருப்பாலைக்குடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.12.2023

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் திருப்பாலைக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது 4 வது மகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்.

2. அ.சா.1 வேலைக்கு செல்லு்போதெல்லாம் கேலி செய்துகொண்டு அ.சா.1 ஐ காதலிப்பதாக சொல்லி வந்தார். அவர் வீட்டில் சொல்லியும் ஆஜர் எதிரி கேட்கவிலலை

3. 10ம் தேதி இதேபோல் தொடர்ந்து கேலி செய்து வந்தார். அ.சா.1 என்னிடம் வந்து சொன்னார். நான் எனது கொழுந்தன் மனைவி வசந்தா ராணியிடம் சொல்லி கேட்க சொன்னோம்.எதிரியின் பெற்றோர்கள் கேட்கவில்லை. அதன்பிறகு எனது மகள் எனது கணவரிடம் சொன்னார்

4. எனது கணவர் சென்று எதிரியிடம் கேட்டார். எதிரி நான் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். அதன்பிறகு நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நாங்களும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சமயமுத்து வீடும் எதிரி வீடும் பக்கத்து, பக்கத்து வீடு என்றால் சரிதான். எதிரி அ.சா.1 தொந்தரவு செய்தது பற்றி எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகள் சொல்லி தான் மேற்படி விவரங்கள் தெரியும் என்றால் சரிதான்.

2. எதிரி அ.சா.1 ஐ தொந்தரவு செய்தது பற்றி காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்திர்களா என்றால் இல்லை. எனது கணவர், நான், எனது கொழுந்தனார் மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் எதிரி வீட்டிற்கு சென்று எதிரியை அடித்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அது பொய் வழக்கு ஆகும்.

3. மேற்படி சம்பவத்திற்கு பிறகு தான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தீர்கள் என்றால் சரிதான். இது சம்பந்தமாக போலிசார் என்னை திருப்பாலைக்குடி புதிதாக கட்டிய V.M.கிளினிக்கில் வைத்து விசாரித்தார்கள்.

4. நான் சொன்னதுபோல சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனது கொழுந்தன் மீது புாகர் அளித்ததை மனதில் வைத்துக் கொண்டு எனது மகள் மூலம் எதிரி மீது புகார் அளித்து எனது மகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 358/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கிட்டப்பா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.அய்யாத்துரை |
| Village | : | திருப்பாலைக்குடி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 05.12.2023

---

**முதல் விசாரணை**

1. நான் திருப்பாலைக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடல் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது 4 வது மகள் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊரைச் சேர்ந்தவர்.

2. எனக்கு மொத்தம் நான்கு பெண் குழந்தைகள் ஆகும். எதிரி எனது மகளை வேலைக்கு சென்று வரும்போது கேலி செய்து வந்தார். இரண்டு மூன்று முறை நான் சென்று எதிரியை பார்த்து சொல்லி வந்தேன். எதிரியின் தகப்பனாரிடமும் சொல்லி வந்தேன் அவர்களும் கண்டிக்கவிலலை.

3. அதன்பிறகு நான் எதிரியிம் கேட்டபோது நான் அவரை அடித்துவிட்டதாக காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டார். எதிரி தொடர்ந்து எனது மகளை கேலி செய்ததால் எனது மகள் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நாங்களும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது தம்பி சமயமுத்து வீடும் எதிரி வீடும் பக்கத்து, பக்கத்து வீடு என்றால் சரிதான். எதிரி எனது மகளை கேலி செய்த விவரம் எனது மகள் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான்.

2. இதற்கு முன்பு எனது மகளை எதிரி கேலி செய்ததாக காவல் நிலையத்தில் ஏதும் புகார் அளித்தீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை

3. எங்கள் மீதும், எனது தம்பி மீதும் எதிரி புகார் அளித்த பிறகு தான் போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 சொன்னதுபோல சம்பவம் ஏதும் நடைபெறவிலலை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல